# 'யோகநாதன்'கள் உருவானால் பசுமையாய் மாறும்!

**ரா.கீர்த்திப்ரியன், கோவையிலிருந்து எழுதுகிறார்:** சென்னையை தாக்கிய, 'வர்தா' புயலால், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மிக பழமையான மரங்கள் வேரோடு சாய்ந்தன; இது, இயற்கை பேரிடர். செயற்கையாக, மரங்களை வெட்டி சாய்க்கக் கூடாது!

சமீபத்தில், கோவை – பொள்ளாச்சி சாலை, நான்கு வழிப் பாதையாக மாற்றப்படுவதாக அறிவிப்பு வெளியானது. அதற்காக, சாலையோரம் இருபுறம் இருந்த பழமைவாய்ந்த மரங்கள் ஆயிரக்கணக்கில், ஒரே நாளில் வெட்டி வீழ்த்தப்பட்டது. கொடுமையிலும் கொடுமை!

இதற்கு முன், கோவை – அவிநாசி சாலை விரிவாக்கத்திற்காக, நூற்றுக்கணக்கான மரங்களை பலி வாங்கினர். இன்று, வாகனங்களில் செல்வோர் ஒதுங்கக் கூட இடமின்றி தவிக்கின்றனர். மரங்கள் வெட்டப்பட்டால், வெட்டப்பட்ட மரங்கள் எண்ணிக்கையை விட, இரு மடங்கு மரக்கன்றுகள் நடப்பட வேண்டும். இதைத் தான், நீதிமன்றமும் வலியுறுத்துகிறது.

திருவண்ணாமலையில், கிரிவலப் பாதையை அகலப்படுத்துவதாக, அரசு அறிவித்தது. அதற்காக, மரங்கள் வெட்டப்படும் அபாயகரம் தோன்றியது. அதை கண்டித்து, உள்ளூர் மட்டுமல்ல, வெளிநாட்டு பக்தர்களும் உண்ணாவிரதப் போரில் குதித்தனர்; திட்டத்திலிருந்து, அரசு பின் வாங்கியது.

சமீபத்தில், தமிழக முதல்வர், பன்னீர்செல்வத்தை சந்தித்து, 'மரங்களை நடுவது, நீர் ஊற்றி பராமரிப்பதை, மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும்' என, உருக்கமான வேண்டுகோளை விடுத்தார், நடிகர் விவேக்.

நாடெங்கும் தவறாமல் மழை பெய்யவும், கோடிக்கணக்கான மரக்கன்றுகளை, எவ்வித தாமதமும் இன்றி நடும் பணிகளை விரைவில் துவக்க வேண்டும்.

ஒரு லட்சம் மரக்கன்றுகளை, தமிழகம் எங்கும் நட்டு சாதனை புரிந்தது மட்டுமின்றி, அவற்றை தொடர்ந்து பராமரித்து, பாதுகாத்து வருபவர், கோவை மருதமலை கிளை, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக கண்டக்டர், யோகநாதன்! சமூக சேவைக்காக, துணை ஜனாதிபதியிடம் பதக்கம் பெற்ற யோகநாதனுக்கு, சபாஷ் போடலாம். இதுபோல, தமிழகமெங்கும் தன்னலம் கருதாமல், நாட்டு நலம் பேண, யோகநாதன்கள், இயற்கை போராளிகள் எண்ணற்றோர், உருவாக வேண்டும்!

●●●

தினமலர்
கோயம்புத்தூர் | வியாழன் | 5.1.2017